அத்தியாயம் - 1


# இணையமும் இணையப் பக்கங்களும்

இது இணையயுகம். தொழில், வியாபாரம், பள்ளி, கல்லூரிகள், பொழுதுபோக்கு, வீடு என அன்றாட வாழ்வின் அனைத்து துறைகளிலும் இணையம் நுழைந்துவிட்டது. உங்களது தொழில் சம்பந்தமான தகவல்களை அல்லது உங்கள் கருத்துக்களை உலக அளவில் உடனடியாக கொண்டு செல்லும் சிறந்த தகவல் தொடர்பு சாதனம் இணையம்தான். இணையத்தில் நீங்கள் காணும் அனைத்து பக்கங்களும் வெப் டாக்குமெண்ட்டுகள் (Web Document) என்றழைக்கப்படுகின்றன. இந்த வெப் டாக்குமெண்ட்டுகள் ஹெச்.டி.எம்.எல். (HTML - Hyper Text Markup Language) எனப்படும் ஒரு ஸ்கிரிப்ட் மொழி மூலம் உருவாக்கப்படுகின்றன. ஒரு HTML ஸ்கிரிப்டானது பல்வேறு டேகுகள் (Tags), அட்ரிபியூட்டுகளை (Attributes), ஹைப்பர்லிங்குகளை (Hyperlinks) கொண்டிருக்கும். HTML லில் உபயோகப்படுத்தப்படும் அனைத்து டேகுகள், அட்ரிபியூட்டுகள் ஆகியவற்றை அறிந்துகொண்டு அவற்றின் உதவியுடன் உங்களைப்பற்றிய விவரங்கள், உங்கள் கருத்துக்கள் அல்லது உங்களது தொழில்/நிறுவன தகவல்கள் ஆகியவற்றை ஒன்று அல்லது அதற்கும்மேற்பட்ட பக்கங்களில் டெக்ஸ்ட்டுகளாக, படங்களாக, இசை வடிவமாக, ஒளி வடிவமாக பார்வையிடுபவர்களை கவரும்படியாக வெளிப்படுத்த வைக்கலாம். ஒரு இணையப் பக்கத்திலிருந்து மற்றொரு இணையப் பக்கத்திற்கு செல்லவைக்கலாம். அதுமட்டுமல்லாமல் பார்வையிடுபர்களின் கருத்துக்களை /

கேள்விகளை பெற்று அவற்றிற்குரிய பதில்களை அவர்களுக்கு அனுப்பிவைக்கலாம். ஒரு ஹெச்.டி.எம்.எல் ஃபைல் என்பது வெறும் டெக்ஸ்ட் வடிவ ஃபைல்தான். விண்டோஸில் உள்ள நோட்பேட் டெக்ஸ்ட் எடிட்டரிலேயே டைப் செய்து உருவாக்கிவிடலாம். இந்த ஃபைலின் எக்ஸ்டென்ஷன் .htm அல்லது .html என இருக்கவேண்டுமென்பது கட்டாயமாகும். இப்படி உருவாக்கிய ஃபைலை விண்டோஸில் உள்ள இண்டர்நெட் எக்ஸ்புளோரர் எனும் பிரவுசர் சாஃப்ட்வேர் மூலம் பார்வையிடலாம். இதற்கென இணைய இணைப்பு பெறத் தேவையில்லை.

உலகம் முழுவதுமுள்ள கோடிக்கணக்கான கணிப்பொறிகளின் ஒருங்கிணைப்பே இணையம் (Internet) என்றழைக்கப்படுகிறது. இரண்டு கணிப்பொறிகளை கம்பிகள் மூலம் ஒருங்கிணைத்து தகவல்களை பரிமாறிக்கொள்ள செய்வதே Network எனப்படும். உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வகையான கணிப்பொறிகளை தொலைபேசி மற்றும் செயற்கைகோள் மூலமாக ஒருங்கிணைத்து சில குறிப்பிட்ட முறைகளில் (HTTP : Hyper Text Transfer Protocol) தகவல்களை பரிமாறிக்கொள்ள செய்வதே Inter Network எனப்படும் Internet (இணையம்) ஆகும். இருபத்திநான்கு மணி நேரமும் இயங்கக்கூடிய சர்வர் (Server) எனப்படும் கணிப்பொறிகளில்தான் பல்வேறு விதமான தகவல்கள் அடங்கிய இணையப்பக்கங்கள் அவற்றிற்கென ஒரு இணைய முகவரியில் (www.microsoft.com) HTML வடிவ ஃபைல்களாக (index.htm) சேமித்து வைக்கப்பட்டிருக்கும். Browser எனப்படும் Internet Explorer, Netscape போன்ற பிரத்யேகமான ஃசாப்ட்வேர்கள் இந்த HTML வடிவ ஃபைல்களை படித்து அவற்றிலுள்ள தகவல்களை வெளிப்படுத்தும். தொலைபேசி வழியாக தங்கள் அலுவலக/வீட்டு கணிப்பொறிகளை இணையத்தில் இணைத்து பிரவுசர்கள் உதவியுடன் தேவையான இணையப்பக்கங்களுக்கு சென்று / தேடி அவற்றை பார்வையிடலாம்.

உதாரணத்திற்கு மணிமேகலைப்பிரசுரத்தாரின் இணையப் பக்கம் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை கவனியுங்கள். படம் 1.1




படம் 1.1

இந்த இணையப்பக்கத்தை உருவாக்குவதற்காக எழுதப்பட்டுள்ள HTML ஸ்க்ரிப்ட் கீழே அளிக்கப்பட்டுள்ளதை காணலாம்.

```
<html>
<head>
<title>www.manimekalaiprasuram.com</title>
<meta http-equiv="Content-Type" content="text/html; charset=iso-8859-1">
<script language="JavaScript">
<!--
function MM_reloadPage(init) {  //reloads the window if Nav4 resized
```

```
if (init==true) with (navigator)
{if ((appName=="Netscape")&&(parseInt(appVersion)==4)) {
document.MM_pgW=innerWidth; document.MM_pgH=innerHeight;
onresize=MM_reloadPage; }}
else if (innerWidth!=document.MM_pgW
|| innerHeight!=document.MM_pgH) location.reload();
}
MM_reloadPage(true);
// -->
</script>
</head>


<body bgcolor="#CCCCFF" text="#000000" leftmargin="0"
topmargin="0" marginwidth="0" marginheight="0" vlink="#990000"
alink="#000066" link="#FFCC00">
<div id="Layer1" style="position:absolute; left:287px; top:6px;
width:201px; height:194px; z-index:1">
<table width="79%" border="0" cellspacing="0" cellpadding="0"
height="178">
<tr>
<td height="22"><img src="images/logo1.jpg" width="200"
height="35"></td>
</tr>
<tr>
<td><img src="images/logo2.jpg" width="200" height="53"></td>
</tr>
<tr>
<td><img src="images/logo3.jpg" width="200" height="48"></td>
</tr>
```

```
<tr>
  <td height="39"><img src="images/logo4.jpg" width="200"
height="47"></td>
</tr>
<tr>
  <td><img src="images/logo5.jpg" width="200" height="41"></td>
</tr>
</table>
</div>
<div id="Layer2" style="position:absolute; left:43px; top:235px;
width:437px; height:36px; z-index:2">
  <div align="left">
    <table width="99%" border="0" cellspacing="0" cellpadding="0">
     <tr>
       <td width="20%"><img src="images/anb1.jpg" width="199"
height="53"></td>
       <td><img src="images/anb2.jpg" width="237" height="53"></td>
       <td><img src="images/anb3.jpg" width="291" height="53"></td>
     </tr>
    </table>
  </div>
</div>
<div id="Layer3" style="position:absolute; left:-2px; top:393px;
width:216px; height:10px; z-index:3; background-color: #CCCCFF; layer-
background-color: #CCCCFF; border: 1px none #000000">
  <p align="center"><font face="Athavan" size="4"
color="#FF0000"><font face="Geneva, Arial, Helvetica, san-serif"><font
color="#000066"><a href="aboutus.htm"><font color="#990000">Click
    Here For More.....</font></a></font></font></font></p>
```

```
</div>
<div id="Layer5" style="position:absolute; left:570px; top:2px; width:130px; height:180px; z-index:5"><img src="images/lena.gif" width="150" height="200"></div>
<div id="Layer6" style="position:absolute; left:67px; top:2px; width:137px; height:188px; z-index:6"><img src="images/tamilvaphoto.gif" width="150" height="200"></div>
<div id="Layer4" style="position:absolute; left:273px; top:290px; width:315px; height:126px; z-index:7"><img src="images/addressENG.gif" width="312" height="139"></div>
<div id="Layer7" style="position:absolute; left:0px; top:434px; width:779px; height:17px; z-index:8; background-color: #000000; layer-background-color: #000000; border: 1px none #000000">
<div align="center"><font face="Verdana, Arial, Helvetica, sans-serif" size="1"><b><font color="#CCCCCC">Designed
and Developed by</font></b> <font color="#FFCC00"><i><b><a href="http://www.infonitetech.com">Infonite
Technologies Private Limited</a></b></i></font></font></div>
</div>
<div id="Layer8" style="position:absolute; left:5px; top:312px; width:180px; height:53px; z-index:9"><font face="Verdana, Arial, Helvetica, sans-serif" size="2" color="#990000"><a href="at_____4.TTF"><font color="#000099">Download
and Save the font in Font Folder of your computer's control Panel.</font></a></font></div>
<div id="Layer9" style="position:absolute; left:55px; top:204px; width:155px; height:21px; z-index:10"><img src="images/tamilvanan.jpg" width="174" height="18"></div>
```

```
<div id="Layer10" style="position:absolute; left:563px; top:204px; width:153px; height:14px; z-index:11"><img src="images/lenatamailvanan.jpg" width="171" height="18"></div>
<p> </p>
<p> </p>
<p> </p>
<p> </p>
<p> <font face="Athavan"><br>
 </font><font
face="Athavan">      </font></p>
</body>
</html>
```

இதே போன்று பிரபல தேடுதளமான யாகூ (www.google.co.in) தளத்தை படம் 1.2ல் காணலாம். அதற்கான HTML கோடிங்குகளையும் கீழே காணலாம்.




படம் 1.2

```
<html><head><meta http-equiv="content-type" content="text/html;
charset=ISO-8859-1"><title>Google</title><style><!--
body,td,a,p,.h{font-family:arial,sans-serif;}
.h{font-size: 20px;}
.q{color:#0000cc;}
//-->
</style>
<script>
<!--
function sf(){document.f.q.focus();}
function c(p,l,e){var f=document.f;if (f.action && document.getElementById)
{var hf=document.getElementById("hf");if (hf) {var t = "<input type=hidden
name=tab value="+l+">";hf.innerHTML=t;}f.action = 'http://'+p;e.cancelBubble=true;
f.submit();return false;}return true;}
// -->
</script>
</head><body bgcolor=#ffffff text=#000000 link=#0000cc vlink=#551a8b
alink=#ff0000 onLoad=sf()><center><table cellpadding=0 cellspacing=0
border=0><tr><td align=right valign=bottom><img src=images/hp0.gif width=158
height=78 alt="Google"></td><td valign=bottom><img src=images/hp1.gif width=50
height=78 alt=""></td><td valign=bottom><img src=images/hp2.gif width=68
height=78 alt=""></td></tr><tr><td class=h align=right valign=top><b></b></td><td
valign=top><img src=images/hp3.gif width=50 height=32 alt=""></td><td valign=top
class=h><font color=#6f6f6f style=font size:16px>< b>India</b></font>
</td></tr></table><br> <form action="/search" name=f><span id=hf></span><table
border=0 cellspacing=0 cellpadding=4><tr><td nowrap class=q><font size=-
1><b><font color=#000000>Web</font></b>    <a id=1a
```

```
class=q href="/imghp?hl=en&tab=wi&ie=UTF-8" onClick="return c('www.google.
co.in/imghp','wi',event);">Images</a>    <a id=2a class=q
href="/grphp?hl=en&tab=wg&ie=UTF-8" onClick="return c('www.google.co.
in/grphp','wg',event);">Groups</a>    <a id=4a class=q
href="/nwshp?hl=en&tab=wn&ie=UTF-8" onClick="return c('www.google.co.in
/nwshp','wn',event);">News</a>    <b><a
href="/options/index.html"
class=q>more &raquo;</a></b></font></td></tr></table><table
cellspacing=0 cellpadding=0><tr valign=middle><td width=75> </td><td
align=center><input maxLength=256 size=55 name=q value="">
	<script>
	document.f.q.focus();
	</script>
	<input type=hidden name=ie value="ISO-8859-1"><input name=hl
type=hidden value=en><br><input type=submit value="Google Search"
name=btnG><input type=submit value="I'm Feeling Lucky" name=btnI></td><td
valign=top nowrap><font size=-2>  <a href=/advanced_search?
hl=en>Advanced Search</a><br>  <a href=/preferences?hl=en>
Preferences</a><br>  <a href=/language_tools?hl=en>Language
Tools</a></font></td></tr><tr><td colspan=3 align=center><font size=-1>Search:
<input id=all type=radio name=meta value="" checked><label for=all> the
web</label><input id=cty type=radio name=meta value="cr=countryIN" ><label
for=cty>pages from India</label></font></td></tr></table></form><p><font size=-
1></font><br>Google.co.in offered in:
	<a href="http://www.google.co.in/hi">Hindi</a>
	<a href="http://www.google.co.in/bn">Bengali</a>
	<a href="http://www.google.co.in/te">Telugu</a>
	<a href="http://www.google.co.in/mr">Marathi</a>
```

```
<a href="http://www.google.co.in/ta">Tamil</a> <br> <br><br><font
size=-1><a href="/ads/solutions.html">Advertising Solutions</a> - <a
href="/services/">Business Solutions</a> - <a href=/about.html>About
Google</a> - <a href=http://www.google.com/ncr>Go to Google.com</a><span
id=hp style="behavior:url(#default#homepage)"></span>
      <script>
      //<!--
      if   (!hp.isHomePage('http://www.google.co.in/'))   {document.write("<p><a
href=\"/mgyhp.html\"
onClick=\"style.behavior='url(#default#homepage)';setHomePage('http://www.
google.co.in/');\">Make Google Your Homepage!</a>");}
      //-->
</script></font><p><font size=-2>&copy;2004 Google - Searching 4,285,199,774
web pages</font></p></center></body></html>
```

மேற்கண்ட இந்த HTML ஸ்கிரிப்டிற்கான கோடிங்குகளை நம்மால் சுலபமாக கற்றுக் கொள்ள முடியும். இது போன்ற பல இணையப் பக்கங்களையும் உருவாக்க முடியும். ஆனால் இப்படி ஸ்கிரிப்ட்டுகளை நாமே எழுதி நமது இணையப் பக்கங்களை உருவாக்குவதற்கு பதிலாக மிக எளிய முறையில் விரைவாகவும், அழகாகவும் உருவாக்க உதவுவதற்காக வெளியிடப்பட்டதே ஃபிரண்ட்பேஜ் 2000 எனும் வெப் டெவலெப்மெண்ட் சாஃப்ட்வேராகும். இது மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் வெளியீடாகும். மைக்ரோசாஃப்ட் நிறுவன வெளியீடான எம்.எஸ்.வேர்டு, எம்.எஸ்.எக்ஸெல் ஆகியவற்றை பயன்படுத்தியவர்கள் மிக சுலபமாக இதனை கற்றுக்கொள்ள முடியும். எம்.எஸ்.வேர்டை பயன்படுத்தி எப்படி ஒரு கடிதத்தை உருவாக்குகிறீர்களோ அதைப்போன்றே ஃபிரண்ட்பேஜை பயன்படுத்தி உங்களுக்கு விருப்பமான இணையப் பக்கங்களை உருவாக்கிக் கொள்ளலாம். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களது இணையப்பக்கத்தில் இடம் பெற வேண்டிய உரைநடைகளை (Text), படங்களை, அனிமேஷன்களை,

இசைத்தொகுப்புகளை மற்றும் வீடியோ படங்களை அப்படியே பிரண்ட்பேஜ் எடிட்டரில் எம்.எஸ்.வேர்டில் எப்படி ஒரு டாக்குமெண்ட்டை உருவாக்குவோமோ அதைப்போல உருவாக்கவேண்டியதுதான். மற்றபடி இதற்குத் தேவையான HTML கோடிங்குகளை பிரண்ட்பேஜ் 2000 நமக்காக உருவாக்கிக் கொடுத்துவிடும். அதுமட்டுமல்லாமல் பல இணையப்பக்க மாதிரி வடிவமைப்புகள் (Template) மற்றும் Theme என்றழைக்கப்படும் கண்ணைக்கவரும் அழகிய வண்ணங்கள், எழுத்துவடிவங்கள் என பல வசதிகளும் ஃபிரண்ட்பேஜில் உள்ளது.

இனி ஃபிரண்ட்பேஜில் நுழைவோம்.


அத்தியாயம் – 2

# ஃபிரண்ட்பேஜ் திரைத் தோற்றம்

ஃபிரண்ட்பேஜ் மூலம் இணையப் பக்கங்களை உருவாக்க வேண்டுமெனில் உங்கள் கணிப்பொறியில் முறைப்படி இந்த சாஃப்ட்வேர் நிறுவப்பட்டிருக்கவேண்டும். உங்களுக்கு கணிப்பொறி அளித்தவர்களை நாடினால் அவர்கள் இதை நிறைவேற்றித் தருவார்கள். ஃபிரண்ட்பேஜ் 97, ஃபிரண்ட்பேஜ் 2000, ஃபிரண்ட்பேஜ் 2002, ஃபிரண்ட்பேஜ் 2003 என பல பதிப்புகளை மைக்ரோசாஃப்ட் நிறுவனம் வெளியிட்டுள்ளது. 97, 2000, 2002, 2003 ஆகிய எண்கள் அதன் பதிப்புகளை குறிக்கிறது. அடிப்படையாக ஒரு இணையப்பக்கத்தை உருவாக்கத் தேவையான வசதிகளை இந்த அனைத்து பதிப்புகளும் கொண்டிருப்பதுடன் ஒரு சில கூடுதல் வசதிகளையும் பிரத்யேகமாக கொண்டிருக்கும். இந்நூலில் ஃபிரண்ட்பேஜ் 2000 எனும் பதிப்பில் எவ்வாறு இணையப் பக்கங்களை உருவாக்குவது என விவரிக்கப்பட்டுள்ளது.

ஃபிரண்ட்பேஜ் 2000 பதிப்பில் நுழைய உங்கள் கணிப்பொறியின் டெஸ்க்டாப் திரையில் உள்ள ஸ்டார்ட் (Start) பட்டனை மவுஸ் மூலம் க்ளிக் செய்யுங்கள். படம் 2.1ல் விண்டோஸ் கணிப்பொறியின் டெஸ்க்டாப் திரை வெளிப்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். (உங்கள் கணிப்பொறியின்

டெஸ்க்டாப் திரைத்தோற்றம் நிறுவப்பட்ட முறையைப்பொறுத்து இதிலிருந்து மாறுபட்டு காணப்படலாம்.)





படம் 2.1

அடுத்து Start மெனுவில் உள்ள Programs என்பதை தேர்வு செய்யுங்கள். இப்போது அதன் அருகில் ஒரு மெனு வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். அதிலுள்ள Microsoft Frontpage என்பதில் டபுள் க்ளிக் செய்யுங்கள்.படம் 2.2





படம் 2.2

இப்போது திரையில் ஃபிரண்ட்பேஜிற்கான Splash Screen (படம் 2.3) வெளிப்படுத்தப்பட்டு அதன் பிறகு ஃபிரண்ட்பேஜின் முகப்புத்திரை வெளிப்படுத்தப்படுவதைக் காணலாம். படம்.2.4



Microsoft
FrontPage 2000
MICROSOFT OFFICE
This product is licensed to
United
United Processors
Product ID: 50106-270-4270134-02569
Copyright © 1995-1999 Microsoft Corporation. All rights reserved.
This program is protected by US and international copyright laws
as described in Help About.

படம் 2.3


Microsoft FrontPage
File Edit View Insert Format Tools Table Frames Window Help
(None)
(default font)
Normal
Views
new_page_1.htm
Page
Folders
Reports
Navigation
Hyperlinks
Tasks
Normal
HTML
Preview

படம் 2.4


வழக்கமாக எம்.எஸ்.வேர்டு, எக்ஸெல் போன்ற விண்டோஸ் அப்ளிகேஷன் சாஃப்ட்வேர்களில் எப்படி நுழைவீர்களோ அதைப்போன்றுதான் ஃபிரண்ட்பேஜினுள் நுழைவதுமாகும். வேர்டு, எக்ஸெல் ஆகியவற்றின் முகப்புதிரையில் காணப்படும் பொதுவான டூல்கள் (Title Bar, Menu Bar, Standard Tool Bar, Formatting Tool Bar, Vertical Scroll Bar, Horizontal Scroll Bar) அனைத்தும் ஃபிரண்ட்பேஜிலும் வெளிப்படுத்தப்படும். கூடுதலாக ஃபிரண்ட்பேஜிற்கான பிரத்யேகமான டூல்களும் (Views Bar, Page View Tabs, Web Page Window, Estimated Download Time) வெளிப்படுத்தப்படும். பார்க்க படம் 2.5




படம் 2.5

ஃபிரண்ட்பேஜ் இயல்பாக ஒரு வெற்று இணையப்பக்கத்துடன் வெளிப்படுத்தப்படும் Web Page Window என வட்டமிட்டு காட்டப்பட்டுள்ள வெள்ளைப்பகுதியே அந்த வெற்று இணையப் பக்கமாகும். இந்த இணையப் பக்கத்துக்கு ஃபிரண்ட்பேஜ் இயல்பாக new_page_1.htm (படம் 2.5ல் வட்டமிட்டு காட்டப்பட்டிருக்கும்) என பெயரிட்டிருக்கும். இனி இந்த Web Page Window பகுதியில் நீங்கள் என்னவெல்லாம் செய்கிறீர்களோ அதற்கான HTML கோடிங்குகளை new_page_1.htm ஃபைலில் ஃபிரண்ட்பேஜ் நமக்காக உருவாக்கிக் கொடுத்துவிடும். ஃபிரண்ட்பேஜிலிருந்து வெளியேறி இண்டர்நெட் எக்ஸ்புளோரரர் அல்லது நெட்ஸ்கேப் நேவிகேட்டர் போன்ற பிரவுசர் சாஃப்ட்வேர்களில் இந்த new_page_1.htm ஃபைல் பெயரை அது சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பாதையுடன் அளித்தால் நீங்கள் உருவாக்கிய இணையப்பக்கம் அந்த பிரவுசரில் வெளிப்படுத்தப்படும். உங்கள் கணிப்பொறியில் உருவாக்கப்படும் இணையப்பக்கங்களை உங்கள் கணிப்பொறியில் உள்ள பிரவுசர்கள் மூலமே பார்வையிட்டு சரிபார்த்துக் கொள்ளலாம். இதற்கு இணைய இணைப்பு தேவையில்லை. உங்கள் கணிப்பொறியில் இணைய இணைப்பு இருப்பின் ஃபிரண்ட்பேஜ் மூலம் உருவாக்கப்பட்ட இணையப்பக்கங்களை இலவசமாக வெளிப்படுத்த உதவும் www.geocities.com போன்ற தளங்களில் சேமித்துவைத்து விட்டு உலகின் எந்த மூலையிலிருந்தும் உங்களது இணையப்பக்கத்தை பார்வையிடலாம். இந்த இணையதள முகவரியை உங்கள் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் தொழில் சார்ந்தவர்கள் அனைவருக்கும் அறியப்படுத்தி அவர்களையும் பார்வையிட வைக்கலாம்.

இனி உரைநடை (Text) மட்டும் கொண்ட ஒரு எளிய இணையப்பக்கத்தை எவ்வாறு உருவாக்குவது எனக் காண்போம். தற்போதைக்கு ஃபிரண்ட்பேஜிலிருந்து வெளியேறுவோம். இதற்கு File மெனுவில் உள்ள Exit என்பதில் க்ளிக் செய்யுங்கள். படம் 2.6


Microsoft FrontPage
File Edit View Insert Format Tools Table Frames Window Help
New
Open... Ctrl+O
Close Ctrl+F4
Open Web...
Save Ctrl+S
Save As...
Import...
Preview in Browser...
Page Setup...
Print Preview...
Print... Ctrl+P
Send
Properties...
Recent Files
Recent Webs
Exit
Tasks
Normal
Normal
HTML
Preview
For Help, press F1
Start
Microsoft FrontPage

படம் 2.6

✳


அத்தியாயம் - 3

# ஒரு எளிய இணையப் பக்கம்


இந்த அத்தியாயத்தில் Welcome to Manimekalai Prasuram என்ற ஒரு உரைநடையை எவ்வாறு ஒரு இணையப்பக்கமாக உருவாக்கி வெளிடவேண்டும் என்பதைக் காண்போம். கீழே உள்ள HTML கோடிங்குகளை அப்படியே விண்டோஸின் நோட்பேட் எடிட்டரில் உருவாக்குங்கள் படம் 3.1 மற்றும் 3.2

new_page_1.htm

```
<HTML>
<BODY>
Welcome to Manimekalai Prasuram
</BODY>
</HTML>
```




படம் 3.1




படம் 3.2

இந்த டெக்ஸ்ட் ஃபைலிற்கு new_page_1.htm எனப் பெயரிடுங்கள். இதை சி டிரைவில் சேமித்து வையுங்கள். படம் 3.3.




படம் 3.3